**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

## அவசரக் கூட்டப்பொருள்

2013ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் நாள் செவ்வாய் கிழமை மாலை 3.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| 30.04.13 | 1. தூத்துக்குடி மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளில், ஒரு சில வார்டுகள் கடற்கரை பகுதிகளையும், சில வார்டுகள் விவசாய பகுதிகளையும் உள்ளடக்கி உள்ளது. மேற்படி பகுதிகளில் கொசு உற்பத்தி அதிகமாகும் நிலை உள்ளதால் சிக்குன்குனியா, டெங்கு காய்ச்சல் பரவராக பரவி வருகிறது. எனவே கொசுக்களால் உற்பத்தியாகும் டெங்கு காய்ச்சல், சிக்குன்குனியா போன்ற நோய்கள் பரவா வண்ணம் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வது மிக அவசியமான பணியாகும். எனவே மாநகராட்சியிலுள்ள 60 வார்டு பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு சென்று புகை மருந்து அடிக்க வசதியாக சிறிய புகையடிக்கும் இயந்திரம் (Mini Fogging Machine) இரு வார்டுகளுக்கு ஒன்று வீதம் 30 எண்ணங்கள் வாங்கிடவும், அதற்கான உத்தேச செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** அனுமதிக்கலாம்.<br><br>எச்2/3315/13 | 73) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 2. இம்மாநகராட்சியில் அனைத்துப் பிரிவுகளிலும் உள்ள 5KVA UPS–3 எண்ணம், 2KVA UPS – 5 எண்ணம் மற்றும் 1KVA UPS–2 எண்ணம் ஆகியவற்றிற்கு 2013–14ம் ஆண்டிற்கு வருடாந்திரப் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு கீழ்க்கண்ட விவரப்படி மூன்று நிறுவனங்களிடம் இருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.<br><br>வ. எண் \| நிறுவனத்தின் பெயர் \| விலைப்புள்ளி தொகை<br>1. \| மெசர்ஸ் ஹைகோள் இந்தியா (பி) லிமிடெட், கோயம்புத்தூர்–11 \| ரூ.48,876/– (இதர வரிகள் உள்பட)<br>2. \| மெசர்ஸ் ஏஜி எலெக்ட்ரிக்கல்ஸ், மார்த்தாண்டம்–66 \| ரூ.53300/– (விற்பனை வரி தனி)<br>3. \| மெசர்ஸ் ஸ்ரீஅன்னை எலெக்ட்ரிக்கல்ஸ், கோயம்புத்தூர்–10 \| ரூ.53500/– (விற்பனை வரி தனி)<br><br>மேற்படி மூன்று நிறுவனத்தினர்களின் விலைப்புள்ளிகளில் மெசர்ஸ் Hykon India (P) Ltd. நிறுவனத்தினர், தொகை ரூ.48876/–க்கு (இதர வரிகள் உள்பட) கொடுத்துள்ள விலைப்புள்ளியானது மற்ற இரண்டு நிறுவனத்தினர்களின் விலைப்புள்ளிகளை விட மிகவும் குறைவாக உள்ளது. | 74) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

எனவே மேற்படி மெசர்ஸ் Hykon India (P) Ltd. நிறுவனத்தினரின் விலைப்புள்ளியை ஏற்றுக்கொண்டு மாநகராட்சிப் பிரிவுகளில் உள்ள UPSகளுக்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்யும் வகைக்கு வேலை உத்திரவு வழங்குவதற்கும், விலைப்புள்ளி தொகை ரூ.48876/—ஐ (இதர வரிகள் உள்பட) மேற்படி நிறுவனத்தினருக்கு வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு:**</u> மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ5/2029/13

---

3. இம்மாநகராட்சிப் பகுதி பிரையண்ட்நகர் 7வது தெரு நடுப்பகுதியில் உள்ள பட்டுப்போன பனைமரம் ஒன்றினை 20.03.2013ம் தேதியன்று மாநகராட்சி அலுவலகத்தில் பொது ஏலத்தில் விடப்பட்டது. மேற்படி பொது ஏலத்தில் கீழ்க்கண்ட விவரப்படி இரண்டு நபர்கள் மட்டும் கலந்து கொண்டார்கள்.

| வ. எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் பெயர் விவரம் | ஏலக்கேள்வி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | டி. முருகன், தூத்துக்குடி | ரூ. 250/— |
| 2. | எஸ்.சுப்பிரமணியன், தூத்துக்குடி | ரூ. 240/— |

மேற்படி ஏலத்தில் உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.250/—க்கு ஏலதாரர் திரு. டி.முருகன் என்பவர் ஏலம் கேட்டுள்ளார். எனவே மேற்படி ஏலதாரர் திரு. டி.முருகன் என்பவரின் உச்ச ஏலக் கேள்வி தொகை ரூ.250/—ஐ ஏற்றுக்கொள்வதற்கும், மேற்படியாருக்கு ஏலம் விடப்பட்ட மரத்தினை அகற்றுவதற்கு உரிய அனுமதியினை வழங்குவதற்கும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு:**</u> மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ5/18247/12

75) மாநகராட்சி அதிகாரிகளால் மேற்படி இடம் ஆய்வு செய்யப்பட்டு அதனடிப்படையில் முடிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

---

4. தூத்துக்குடி மாநகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து 24.03.2012ல் மரணம் அடைந்த திரு. எஸ்.பாலகிருஷ்ணன் என்பவரது ஊதியத்தில் மாதம் ரூ.20/— வீதம் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை மற்றும் அதற்கான வட்டித்தொகை கீழ்க்கண்ட விபரப்படி அன்னாரின் மனைவி மற்றும் வாரிசுதாரர் ஆகிய திருமதி. பி.பால்செல்வி என்பவருக்கு வழங்கப்பட வேண்டியது உள்ளது.

| பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ 148 மாதங்கள் | அதற்கான வட்டித் தொகை ரூ. 28.02.2012 முடிய | வழங்கப்பட வேண்டிய மொத்த தொகை ரூ. |
|---|---|---|
| ரூ.2960/— | ரூ.8317/— | ரூ.11277/— |

மேற்கண்ட சிறப்பு சேமநலநிதி மொத்த தொகை ரூ.11277/—ஐ மரணம் அடைந்த வருவாய் உதவியாளர் திரு. எஸ்.பாலகிருஷ்ணன் என்பவரது மனைவி திருமதி. பி. பால்செல்வி என்பவருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு:**</u> சிறப்பு சேமநலநிதி தொகை ரூ.11277/—ஐ வாரிசுதாரர் திருமதி. பி.பால்செல்வி என்பவருக்கு வழங்க மாமன்றம் அனுமதியளிக்கலாம்.

சி2/6719/12

76) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

---

5. தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோவை இயக்குநர் அவர்களின் 08.01.2013ம் தேதிய ந.க.எண் 194/2012/கணக்கர் கடிதத்தில் கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு இம்மாநகராட்சியின் சார்பாக 2012—2013ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பங்குத் தொகையாக ரூ.2,00,000/—ஐ செலுத்தும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இம்மாநகராட்சி சார்பாக ரூ.2,00,000/—ஐ தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

77) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்.

சி1/18532/2010

6. இம்மாநகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவின் கீழ் இயங்குகின்ற நகர்நல மையங்களில் பணிபுரிந்து 31.07.2012 அன்று வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற கீழ்க்கண்டுள்ள பணியாளருக்கு சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை, வட்டி மற்றும் அரசின் பங்கீட்டு தொகை ஆகியன கணக்கிடப்பட்டு கீழ்க்கண்டுள்ளவாறு வழங்க வேண்டியதுள்ளது.

| வ. எண் | பணியாளர் பெயர் திரு/திருமதி | ஓய்வு பெற்ற தேதி | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை ரூ. | வட்டி ரூ. | பங்கீட்டுத் தொகை ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1. | ராஜாமணி/ ஐயங்கன்னு | 31.07.12 | 2960/– | 13870/– | 10000/– | 26830/– |

எனவே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளருக்கு மேற்கண்ட தொகையினை மாநகராட்சியின் பொது நிதியில் இருந்து வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** அனுமதிக்கலாம்.

எச்2/16281/12

78) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

7. இம்மாநகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து பணியிடையில் காலமான கீழ்க்கண்டுள்ள துப்புரவு பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை, வட்டி ஆகியன கணக்கிடப்பட்டு கீழ்க்கண்டுள்ளவாறு அன்னார்களின் வாரிசுகளுக்கு வழங்க வேண்டியதுள்ளது.

| வ. எண் | துப்புரவு பணியாளர் பெயர் திரு/திருமதி | காலமான தேதி | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை ரூ. | வட்டி | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | கணேசன்/மாரிமுத்து, இறப்பு | 09.02.13 | 2960/– | 14655/– | 17615/– |
| 2. | பெருமாள்/மரியமுத்து, இறப்பு | 13.02.13 | 2960/– | 14655/– | 17615/– |
| 3. | சீனியம்மாள்/கிருஷ்ணன், இறப்பு | 12.01.11 | 2960/– | 12046/– | 15006/– |
| | மொத்தம் | | 14800/– | 41356/– | 50236/– |

எனவே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள துப்புரவு பணியாளர்களாக பணிபுரிந்து பணியிடையில் காலமான அன்னார்களின் வாரிசுதாரர்களுக்கு மேற்கண்ட தொகையினை மாநகராட்சியின் பொது நிதியில் இருந்து வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** அனுமதிக்கலாம்.

எச்2/3123/13

79) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

8. தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு காட்டன் சாலையில் மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட சர்வே வார்டு 8, பிளாக் 1, நகரளவு எண் 24/2A, 24/2B இடத்தில் மாநகராட்சியின் மூலம் வணிக வளாகம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டுமான தொகையினை HUDCO நிறுவனத்திடமிருந்து கடனாக பெற்று வணிக வளாகம் கட்டுவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்கண்ட இடத்தில் தயார் செய்யப்பட்ட வரைபடத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்.

எப்1/826/13

80) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | 9. | இம்மாநகராட்சி பகுதி, சேதுபாதை சாலையிலுள்ள கழிவுநீர் பம்பிங் நிலையத்திலிருந்து கிருஷ்ணராஜபுரம் வடிகாலுக்கு செல்லும் குழாய், மேற்படி பம்பிங் நிலையத்தின் முன்பகுதி சாலையில் உடைப்பு ஏற்பட்டு, கழிவுநீர் வெளியே வருவதால் சுகாதார கேடு ஏற்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்கு மிகவும் இடையூறாக இருப்பதால் அப்பகுதியில் புதிய குழாய் பதித்து சீரமைக்க மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ.76793/– செலவு செய்தது, மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>மதிப்பீடு எண் 375/12–13 | 81) பதிவு செய்யப்பட்டது |
| | 10. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான டி.என் 69 5736 குடிநீர் லாரி வாகனம் 26.09.2003ல் வாங்கப்பட்டது. தொடர்ச்சியான பயன்பாட்டில் உள்ளது. தற்போது அதில் ஏற்பட்ட பிரேக், ஸ்டியரிங் பாக்ஸ் ஓவராயிலிங், கிங்பின் ஓவராயிலிங் 4 எண்ணம் ஸ்பிரிங் லீப் மாற்றுதல் கிளட்ச், கேபின் மற்றும் வாகனம் முழுதுமாக டிங்கர் வேலை, ஓவராயிலிங் வேலையினை பார்ப்பதற்கு செலவுத்தொகை ரூ.77000/– ஆகிறது. மாமன்றத்தின் அனுமதி வேண்டி கூடுதல் செலவுத் தொகை ரூ.77000/– செய்ய வேண்டியுள்ளது. தற்போது அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்கண்ட பணி மேற்கொள்ள கூடுதல் செலவினம் செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>இ3/001163/13 | 82) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 11. | தமிழக அரசின் கொள்கை அறிவிப்பின்படி மின்சார சேமிப்பு செய்வதற்கு சூரிய ஒளி மூலம் சூரிய மின் சக்தி தயார் செய்ய இம்மாநகராட்சிக்கு சொந்தமான அதிக பரப்பளவு கொண்ட தருவைகுளம் உரக்கிடங்கு பகுதியில் அரசின் முன்னோடி திட்டமாக சூரிய ஒளி மூலம் மின்சக்தி தயாரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்கண்ட திட்டத்திற்கான செலவுத் தொகை அனைத்தும் அரசு முழு மான்யமாக பெற்று அனுமதிக்க வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** சூரிய ஒளி மூலம் மின்சக்தி தயார் செய்ய திட்டத்திற்கான செலவுத் தொகை அனைத்தும் அரசு முழு மான்யமாக பெற்று அனுமதிக்கலாம்.<br>இ3/3943/2013 | 83) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 12. | மதிப்பீடு தொகை – 63.70 இலட்சம் சிப்பம் எண் –2<br><br>இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள லயன்ஸ்டவுண் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு துறைமுக பொறுப்பு கழகத்தின் கார்பரேட் சோஷியல் ரெஸ்பான்சிபிலிட்டி நிதி (CSR) 2012–13ல் பணி செய்ய 22.03.2013 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.<br><br>1) திரு. எஸ். ரம்போலா, தூத்துக்குடி<br>2) திரு. பி. ஜோதிமணி, தூத்துக்குடி.<br><br>வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப ரீதியாக ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதால் தொழில் நுட்ப ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப கூட்ட பொருளுக்கு 18.04.2013 அன்று ஒப்புதல் பெறப்பட்டது. மேலும் 22.04.2013 அன்று விலைப்புள்ளி திறக்க அனுமதி பெறப்பட்டு திறக்கப்பட்டது.<br><br>1) திரு. எஸ். ரம்போலா, தூத்துக்குடி மதிப்பீட்டை விட 6.38% அதிகம்<br>2) திரு. பி.ஜோதிமணி, தூத்துக்குடி மதிப்பீட்டை விட 6.03% அதிகம். | 84) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டை விட அதிகமாக இருந்ததால் இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு. பி.ஜோதிமணி அவர்களிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் மதிப்பீட்டை விட 2.55% குறைவாக கொடுத்துள்ளார். மேலும் பொறியியல் கையேடு Chapter II எண் 2.7.2ல் உள்ளபடி பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மதிப்பீட்டை விட 5 சதவீதம் அதிகம் கொடுக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஒப்பந்தகாரர் திரு. பி.ஜோதிமணி அவர்கள்மதிப்பீட்டை விட 2.55 சதவீதம் அதிகம் ரூ.6456605/– கொடுத்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம். கூடுதல் செலவினத்தை பொதுநிதியில் செலவு செய்யலாம்.<br>இ1/19926/12 | |
| | 13. மதிப்பீடு தொகை – 50.00 இலட்சம் சிப்பம் எண் –1<br><br>இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள டூவிபுரம் பகுதியில் சங்கரநாராயணன் பூங்காவில் நடை பயிற்சி பாதை அமைக்க மற்றும் பூங்காவில் சிறுவர்கள் விளையாட்டு பொருட்கள் பொருத்தும் பணிக்கு துறைமுக பொறுப்பு கழகத்தின் கார்பரேட் சோஷியல் ரெஸ்பான்சிபிலிட்டி நிதி (CSR) 2012–13ல் பணி செய்ய 22.03.2013 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.<br><br>1) திரு. எஸ். சுரேஷ் ஜெயக்குமார், தூத்துக்குடி<br>2) திரு. பி. ஜோதிமணி, தூத்துக்குடி.<br><br>வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப ரீதியாக ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதால் தொழில் நுட்ப ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப கூட்ட பொருளுக்கு 18.04.2013 அன்று ஒப்புதல் பெறப்பட்டது. மேலும் 22.04.2013 அன்று விலைப்புள்ளி திறக்க அனுமதி பெறப்பட்டு திறக்கப்பட்டது.<br><br>1) திரு. ஜே.சுரேஷ் ஜெயக்குமார், தூத்துக்குடி, மதிப்பீட்டை விட 4.55% அதிகம்<br>2) திரு. பி.ஜோதிமணி, தூத்துக்குடி மதிப்பீட்டை விட 5.97% அதிகம்.<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டை விட அதிகமாக இருந்ததால் இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு. ஜே.சுரேஷ் ஜெயக்குமார் அவர்களிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் மதிப்பீட்டை விட 0.11% குறைவாக ரூ.3298670/– கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br>இ1/19926/12 | 85) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | | 86) 47 மற்றும் 54வது வார்டு மாமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கோரிக்கையின்படி மாநகரப் பகுதிகளில் அமைந்துள்ள நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகளின் ஓரங்களில் காணப்படும் மணல்களை அப்புறப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட துறையினருக்கு நிர்வாக ரீதியாக கடிதம் அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டது. |
| | | 87) 21வது வார்டு மாமன்ற உறுப்பினர் தெரிவித்த கோரிக்கையின்படி தரைமட்ட நீர்த்தேக்க நிலையத்தில் (ழுடுசு) பல மாதங்களாக பழுதாகியுள்ள மின் மோட்டாரை உடனடியாக பழுது பார்த்து சீரான குடிநீர் விநியோகம் நடைபெற நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டது. |
| | | 88) 58வது வார்டு மாமன்ற உறுப்பினர் தெரிவித்த கோரிக்கையின்படி அத்திமரப்பட்டி பகுதியில் அமைந்துள்ள ஆழ்துளை கிணற்றினை தூர்வாரி புதிய குழாய்கள் பதித்து 15 தினங்களுக்குள் சீரான குடிநீர் விநியோகம் |

| | | |
|---|---|---|
| | | செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது |
| | | 89) 53வது வார்டு மாமன்ற உறுப்பினர் தெரிவித்த கோரிக்கையின்படி மேற்படி வார்டுக்குட்பட்ட குலசை முத்தாரம்மன் கோவில் தெருவில் (அருந்ததியர் தெரு) அமைந்துள்ள W53/T–165 எண்ணுள்ள தெருவிளக்கு கம்பமானது தெருவின் மையப் பகுதியில் அமைந்துள்ளதாலும், போக்குவரத்திற்கு இடையூராக இருப்பதாலும் மேற்படி கம்பத்தினை தெருவின் ஓரத்தில் இடம் மாற்றம் செய்வதற்கு தேவையான நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. |

மாமன்றம், தூத்துக்குடி
நாள் :   29.04.2013

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி